## 87. உம்ம விட்டால் யாருண்டு

பல்லவி

உம்ம விட்டால் யாருண்டு
நீங்க தானே எங்களுக்கு
என் தாயும் தகப்பன் நீரே
என் சொந்தம் பந்தம் நீரே

சரணங்கள்

1. எந்தன் ஆற்றல் ஒன்றுமில்லை
எந்தன் சக்தியும் ஒன்றுமில்லை
தகப்பனின் பாதம் வந்துள்ளேன்
நல்ல பங்கை தெரிந்துள்ளேன்
- உம்மைவிட்டால்

2. பணமும் பதவியும் நிற்காதையா
நினைப்பதெல்லாம் முடிக்காதையா
எனக்காய் ஒன்றை நினைத்தவரே
அதையே நிறைவேற்றி முடிப்பவரே
- உம்மைவிட்டால்

3. எந்த திட்டம் போட்டாலும்
எந்தன் வாழ்வு உயராதையா
நீரே எனக்குள் வாழ்கின்றீர்
நீரே என்னை உயர்த்திடுவீர்
- உம்மைவிட்டால்

4. எங்க ஓட்டம் செல்லாதையா
எங்க தீர்மானம் நடக்காதையா
உம்மால் எல்லாம் ஆகுமே
நீங்க நினைத்தது நடக்குமே
- உம்மைவிட்டால்